# வயது கூடியோருக்கான ‘கோவிட்-19’ உதவி இணைப்பு
(Older Persons COVID-19 Support Line)

‘வயது கூடியோருக்கான ‘கோவிட்-19’ உதவி இணைப்பு’ (Older Persons COVID-19 Support Line) எனும் சேவையானது வயது கூடிய ஆஸ்திரேலியர்களுக்குத் தகவல்கள் மற்றும் உதவிகளை அளித்து அவர்களுக்குத் தொடர்புகளை ஏற்படுத்தித் தருகிறது.

சில வயதானவர்கள் ‘கோவிட்-19’-இனால் பாதிக்கப்படும் நிலையில் இருப்பார்கள், ஆனால் அவர்களுக்கு இண்டர்நெட் இணைப்பு வசதி அதிகம் இருக்காது, ஆகவே அவர்களுடைய சூழ்நிலைகளுக்கேற்ற தகவல்களைப் பெறுவதற்கான வழிகள் அவர்களுக்குத் தேவைப்படும். ‘வயது கூடியோருக்கான ‘கோவிட்-19’ உதவி இணைப்பு’ (Older Persons COVID-19 Support Line) எனும் உதவி இணைப்பு இவர்களுக்குத் தகவல்கள் மற்றும் உதவிகளை அளிக்கிறது.

பின் வரும் தருணங்களில், வயது கூடிய ஆஸ்திரேலியர்கள், அவர்களது குடும்பத்தினர்கள், நண்பர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோர் 1800 171 866 எனும் இலக்கத்தினை இலவசமாக அழைக்கலாம்:

- ‘கோவிட்-19’ கட்டுப்பாடுகளைப் பற்றியும், இதனால் அவர்கள் மீது ஏற்படும் தாக்கத்தைப் பற்றியும் அவர்கள் யாருடனாவது பேச விரும்பினால்
- தனித்துவிட்டதைப் போன்ற உணர்வு அவர்களுக்கு இருந்தால், அல்லது அவர்களுடைய அன்பிற்குரிய ஒருவருடன் அவர்கள் பேச விரும்பினால்
- அவர்கள் யாரையாவது பராமரித்துவந்தால், மற்றும் அவர்களுக்குத் தகவல்கள் தேவைப்பட்டால், அல்லது பேசுவதற்கு யாராவது வேண்டும் என்றால்
- அவர்கள் பெற்றுவரும் முதியோர் பராமரிப்பு சேவைகளை மாற்றிக்கொள்வதைப் பற்றிய உதவி அல்லது அறிவுரை தேவைப்பட்டால்
- புதிய பராமரிப்பு சேவைகளைப் பெறுவது, அல்லது அத்தியாவசியமான பொருட்களைக் கடையில் வாங்குவது போன்றவற்றில் அவர்களுக்கு உதவி தேவைப்பட்டால்
- தங்களைப் பற்றி, அல்லது மறதிநோயுடன் வாழ்ந்துவரும் நண்பர் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவரைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால்
- தங்களுக்கோ, வேறு ஒருவருக்கோ ஒரு-முறை செய்யப்படும் அல்லது தொடர்ந்து அவ்வப்போது செய்யப்படும் உடல்நலப் பரிசோதனைகளை ஏற்பாடு செய்ய அவர்கள் விரும்பினால்.

வயது கூடிய ஆஸ்திரேலியர்கள், அவர்களுடைய உறவினர்கள், பராமரிப்பாளர்கள், நண்பர்கள் அல்லது உதவியாளர்களால் செய்ய இயலுமானவை:

- **1800 171 866** -ஐ அழைக்கலாம்

- வார வேலை நாட்களில், காலை 8.30 முதல் மாலை 6 மணி வரை 'ஆஸ்திரேலியக் கிழக்கு நேரம்' (AEST)
- அவர்களுக்குத் தேவைப்படக் கூடிய தகவல்கள் அல்லது சேவைகள் எதற்காகவும் அழைக்கலாம்.

'வயது கூடியோருக்கான 'கோவிட்-19' உதவி இணைப்பு' பின்வரும் அமைப்புகளின் கூட்டு முயற்சியாகும்:

- 'COTA ஆஸ்திரேலியா'
- 'டிமென்ஷியா ஆஸ்திரேலியா'
- 'நேஷனல் சீனியர்ஸ்' மற்றும்
- 'OPAN'
- ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியைப் பெறுகிறது

## 'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை' (Translating and Interpreting Service (TIS)) உதவி

ஆங்கிலம் பேசாத வயது கூடிய ஆஸ்திரேலியர்கள்:

- 131 450-இல் 'TIS நேஷனல்' -ஐ அழைக்கலாம்,
- மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேட்கலாம், மற்றும்
- 'வயது கூடியோருக்கான 'கோவிட்-19' உதவி இணைப்பு' (Older Persons COVID-19 Support Line) சேவையுடன் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு கேட்கலாம், அல்லது 1800 171 866 எனும் இலக்கத்தைக் கொடுத்து அதனுடன் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு கேட்கலாம்.